**O.S**.248/2012 மேகநாதன் **DW**1

**நாள் :** 15.10.2019.

**சாட்சி இன்று மீண்டும் ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறார்.**

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான், 1 வது வாதி அனைவரும் ஒரே பகுதியில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதி சாந்தி என் அண்ணன் மனைவி. வழக்கின் வாதி, 5 ம் பிரதிவாதியின் நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியும், நானும் தாவா சொத்தை ஒரு லோகநாதன் என்பவருக்கு சுவாதீனம் கொடுத்திருந்தோம் என்றால் சரியல்ல. அதில் நாங்கள் வாடகைக்கு தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. 2 வது பிரதிவாதி சொத்தில் தனது பங்கை ஒரு சுப்பிரமணியம் என்பவருக்கு 11.09.2006 ம் தேதி கிரையம் கொடுத்திருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதே சுப்பிரமணியம் 16.09.2008 ம் தேதி சொத்தை 2 ம் பிரதிவாதியின் மனைவியான 5 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். இந்த கிரையங்கள் அனைத்தும் 7 ம் பிரதிவாதியை ஏமாற்றம் எண்ணத்துடன் உருவாக்கப்பட்டவை என்றால் சரியல்ல. 11.09.2006, 16.09.2008 மற்றும் 20.07.2009 தேதியிட்ட கிரையங்கள் அனைத்தும் செல்லத்தக்கவையல்ல என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 2 ம் பிரதிவாதி சொத்தை 6,7 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்திருப்பதாக சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி,7 ம் பிரதிவாதிக்கு 29.12.2008 ம் தேதி ஏற்பட்ட விற்கிரய ஒப்பந்தத்தின்படி, 27.02.2012 ம் தேதி தாவா சொத்தை கிரையம் கொடுத்தது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அவ்வாறான கிரைய தேதியிலிருந்து 7 ம் பிரதிவாதி சொத்தை எவ்வித இடையூறுமின்றி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து விவசாய பூமி என்றால் சரிதான். அதன் ரீ.ச.எண்.425/1 ஆகும். 12.09.2008 ம் தேதி 1 ம் பிரதிவாதி தனது ¼ பங்கை ஒரு ஈஸ்வரமூர்த்தி என்பவருக்கு கிரையம் கொடுத்ததாக சொல்வது பற்றி எனக்கு தெரியாது. ஒரு தங்கமுத்து என்பவருக்கு 1 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் 20.07.2009 ம் தேதியன்று சொத்தின் ஒரு பகுதியான 1.60 ஏக்கர் நிலத்தை கிரையம் கொடுத்தது தெரியும்.

குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.